# 2022-2023

## Star Student Award

### கொங்கு கலை அறிவியல் கல்லூரி நட்சத்திர மாணவர் விருது வழங்கும் விழா

ஈரோடு ஏப் 25-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் மத்திய அரசின் உயிரித் தொழில்நுட்பத்துறை நட்சத்திரக் கல்லூரி திட்டத்தின் மூலம் நட்சத்திர மாணவர் விருது வழங்கும் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரியின் தாளாளர் கே பழனிச்சாமி தலைமை தாங்கி விருதுகளை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் என். ராமன் வாழ்த்துரை வழங்கினார். நட்சத்திரக் கல்லூரி திட்டத்தின் மூலம் மூன்று ஆண்டுகளாக பல்வேறு திறன் சார்ந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதன் மூலமாக பயன்பெற்று சாதனை புரிந்த சிறந்த மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் உயிர் வேதியல் துறை மாணவர்ன எஸ் பிரேம், உயிரித் தொழில்நுட்பத்துறை மாணவி எஸ் .கோமதி, கணிதத்துறை மாணவர் எம் மனோஜ்குமார், கணினி அறிவியல் துறை மாணவர்எஸ் . மேகநாதன் மற்றும் இயற்பியல் துறை மாணவி பி .பிரியா ஆகியோர் விருதுகளை பெற்றனர். நட்சத்திரக் கல்லூரி திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் இணைப்பேராசிரியர் முனைவர் எ.கே. வித்யா திட்ட செயல்பாடுகள் குறித்து சிறப்புரையாற்றினார், கணினி அறிவியல் துறை தலைவர்பி ரமேஷ் வரவேற்புரை வழங்கினார். கணிதத்துறை துறை இணைப்பேராசிரியர் முனைவர் எஸ் .நாகராஜன்; நன்றியுரை வழங்கினார். பல்வேறு துறைசார்ந்த தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்



ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் மத்திய அரசின் உயிரித் தொழில்நுட்பத்துறை நட்சத்திரக் கல்லூரி திட்டத்தின் மூலம் நட்சத்திர மாணவர் விருது வழங்கும் விழா நடைபெற்றது.



### 'Star' students of Kongu Arts college honoured

Erode, April 25: Star students award ceremony was conducted under the aegis of the Department of Biotechnology, Government of India, Star College Scheme of the Kongu Arts and Science College.

The event was graced by the college correspondent K. Palanisamy, who presided over the function and distributed the awards to the star students.

College principal Dr.N.Raman greeted the star students. Under DBT Star College Scheme several activities were conducted for the students on behalf of the Star-Departments. Awards were given to the best students, who benefited through the Star College Scheme. Biochemistry student A.S. Prem, Biotechnology student S. Gomathi, Mathematics student M. Manojkumar, Computer Science student S. Meganathan and Physics student P. Priya received the awards.

Coordinator of the Star College Scheme, Associate Professor Dr. A.K. Vidyathe spoke on DBT activities. P.Ramesh, Assistant Professor, Head of the Department of Computer Science welcomed and Dr. S. Nagarajan, Associate Professor and Head, Department of Mathematics, proposed a vote of thanks. Various Heads of the Departments, Professors and students attended the function.

### Survey reveals south India most financially secured region

Coimbatore, April 25: Max Life Insurance Co quotient with 51, followed by North (50), West and Life said: "While South India's

## Hands on Workshop

### கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கைத்தொழில் பயிற்சி பட்டறை



ஈரோடு பிப் 26-

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பத் துறையின் கீழ் நட்சத்திர அந்தஸ்து பெற்ற இளங்கலை கணினி அறிவியல் துறையின் சார்பாக முதலாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவ மாணவியர்களுக்கு, கல்வி தொழில் இடைமுக திட்டத்தின் கீழ் பைத்தான் நிரலாக்கம் குறித்த கைத்தொழில் பயிற்சி பட்டறை 21.02.2022 முதல் 22.02.2022 வரை நடைபெற்றது. இந்நிகழ்வில் அசன்ஸ் - டெக்னாலஜியின் உரிமையாளர் டி ரவிக்குமார் மற்றும் கே ஜீவா கலந்து கொண்டு பைத்தான் ப்ரோக்ராம் இன் அடிப்படை குறித்தும், செயல்பாடுகள் குறித்தும், மற்றும் இயக்க முறைமையை நிறுவுதல் குறித்தும், விளக்கிக் கூறினார்கள்இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இளங்கலை கணினி அறிவியல் துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் சுமார் 100 க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்

## Extension Activity

### கொங்கு கலை அறிவியல் கல்லூரி சார்பில் நீட்டிப்புச் செயல்பாடு



ஈரோடு பிப் 24-

கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) மத்திய அசரின் உயிரி தொழில்நுட்பத் துறையின் கீழ் நட்சத்திர அந்தஸ்து பெற்ற இளங்கலை கணினி அறிவியல் துறையின் சார்பில் ஈரோடுஇதிண்டலில் இயங்கிவரும் உடல் ஊனமுற்றோர் அரிமா அறக்கட்டளையில் நீட்டிப்புச் செயல்பாடு நடைபெற்றது. இச்செயல்பாட்டில் அங்கு பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்களின் கணினி அறிவினை மேம்படுத்தும் வகையில் ''மைக்ரோ சாஃப்ட் ஆபிஸ் மூலம் புத்திசாலித்தனமாக வேலை செய்யுங்கள்'' என்ற தலைப்பில் பயிற்சிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் மூலம் மாணவர்கள் கணினி அடிப்படை செயல்பாடுகள் குறித்து அறிந்துகொண்டனர். மேலும் கணினியில் அவர்கள் கொண்டிருந்த ஐயங்கள் நீக்கப்பட்டு கணினியை தயக்கமின்றி பயன்படுத்த ஊக்கிவிகக்பட்டனர். இச்செயல்பாட்டினை கல்லூரியின் தாளாளர்இ முதல்வர்இ துறைத்தலைவர் ஆகியோரின் வழிகாட்டுதலில் இளங்கலை கணினி அறிவியல் துறையின் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் சிறப்புற நிகழ்த்தினர்.

## Faculty Development Program

### கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி

ஈரோடு டிச 9-

கொங்கு கலை அறிவியல் கல்லூரி மத்திய அசரின் உயிரி தொழில்நுட்பத் துறையின் கீழ் நட்சத்திர அந்தஸ்து பெற்ற இளங்கலை கணினி அறிவியல் துறையின் சார்பில் ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்வு நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கணினி அறிவியல் துறை பேராசிரியர்கள் கலந்துகொண்டு திறந்த மூல உரிமம் பெற்ற மென்பொருள் நிறுவல் குறித்து உரையாற்றினர்.

இவ்விழாவில் கல்லூரியின் தாளாளர் முதல்வர் துறைத்தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதப் பணியாளர்கள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# Engagements

## ENGAGEMENTS

**ERODE**

**Kongu Arts and Science College:** Department of Computer Science (U.G.), National Science Day celebrations, Quiz contest on Science and Technology, final round, 10 a.m.

**SALEM**

**Muthayammal College of Engineering**: National Science Day celebrations, 10 a.m.

## ENGAGEMENTS

**ERODE**

**Kongu Arts and Science College:** Department of Computer Science (UG), guest lecture on Guidance on Project Development for final year students, D. Naveenkumar, Senior Software Engineer, Legato Health Technology, Bengaluru, resource person, virtual meet, 10 a.m.

THE HINDU

## ENGAGEMENTS

**ERODE**

**Kongu Arts and Science College:** Department of Computer Science (UG), two-day hands on training-cum-workshop on Computer Hardware and Networking for first year students, T. Manikandan, proprietor, Sridharan Infotech, Erode, resource person, K. Palaniswamy, Correspondent, presides, 10 a.m.

**SALEM**

**Knowledge Institute of Technology:** AICTE sponsored ATAL- faculty development programme on data analytics in smart healthcare, 9:30 a.m.

# Seminar

[redacted]

இணைக்க வேண்டும்.

இதற்காக ஊட்டி, கூடலூர், குன்னூர் உள்ளிட்ட பகுதிகளில் சிறப்பு முகாம் 10.01.2023 அன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இதுவரை வங்கி சேமிப்பு கணக்குடன் ஆதார் எண் இணைக்காத புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவிகள் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அட்டையுடன் இம்முகாமில் கலந்து

வாய் கோட்டாட்சியர்கள் பூஷணகுமார் (குன்னூர்), முகம்மது குதுரதுல்லா (கூடலூர்), மாவட்ட சமூக நல அலுவலர் .பிரவீணா தேவி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சத்தியராஜா, மாவட்ட மின்னாளுமை மேலாளர் காயத்ரி, குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெய்சங்கர், கல்லூரி முதல்வர்கள், வங்கி மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் சிறப்பு விரிவுரையாளர் நிகழ்ச்சி



ஈரோடு ஜன.08-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை சார்பாக மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான சிறப்பு விரிவுரையாளர் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இறுதியாண்டு மாணவர்கள் தங்கள் பாடத்திட்டத்தின் ஓர் முக்கிய அங்கமான ப்ராஜெக்ட் டெவெலப்மென்ட் பற்றிய விரிவுரை வழங்கப்பட்டது. கல்லூரியின் தாளாளர் பி டி தங்கவேல் தலைமை தாங்கினார், துறை தலைவர் எஸ்.முருகானந்தம் இவ்விழாவை துவக்கி வைத்தார், முதல்வர் முனைவர் என் ராமன் சிறப்புரை ஆற்றினார், சிறப்பு விரிவுரையாளராக கோயம்புத்தூர் கே பி ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் கணினி அறிவியல் துறையை சார்ந்த இணை பேராசிரியர் முனைவர் ரா ரமேஷ் கலந்துகொண்டு விளக்கவுரை அளித்தார். மேலும், மாணவர்கள் மென்பொருள் உருவாக்குவதில் உள்ள அனைத்து நிலைகள் பற்றி பயிற்சி எடுப்பதன் அவசியத்தையும் அதில் உள்ள பல்வேறு கட்டமைப்புகள் கற்று சான்றிதழ் பெரும் வழிகளையும் பற்றி எடுத்துக் கூறினார். இறுதியில்மாணவர்களின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

---

இந்தியாவிலேயே முதல்மு | திட்டம் 99 சதவீதம் நிறைவு | கொண்டனர்.



கொங்கு கலை அறிவியல் கல்லூரியில்

## கருத்தரங்கம்

ஈரோடு, டிச.30-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில், மத்திய அரசின் உயிரிதொழில்நுட்ப துறையின் கீழ், நட்சத்திர அந்தஸ்து பெற்ற இளங்கலை கணினி அறிவியல் துறை சார்பில் பைத்தான் நிரல் குறித்த 3 நாட்கள் கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்குக்கு கல்லூரி தாளாளர் பி.டி.தங்கவேல் தலைமை தாங்கினார். முதல்வர் என்.ராமன் முன்னிலை வகித்தார்.

தொழில்நுட்ப பொறியாளர் மற்றும் பயிற்சியாளர்கள் ஆர்.தமயந்தி, ஆர்.புகழேந்தி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு, பைத்தான் நிரலின் முக்கியத்துவம் பற்றியும், பைத்தான் நிரலை எவ்வாறு செயல்படுத்த வேண்டும், இந்த நிரலினை கற்றுக்கொண்டால் வேலைவாய்ப்புகள் எவ்வாறு பெறலாம் என்பது குறித்தும் பேசினார்கள். இதில் கணினித்துறை தலைவர் ரமேஷ் மற்றும் பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

---



கொங்கு கலை அறிவியல் கல்லூரியில்

## கருத்தரங்கம்

ஈரோடு, டிச.23-

மத்திய அரசின் உயிரிதொழில் நுட்ப துறையின் நட்சத்திர கல்லூரி திட்டத்தின் கீழ் ஈரோடு நஞ்சனாபுரம் கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் 'தன்னம்பிக்கை' என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்குக்கு கல்லூரி அறக்கட்டளை தலைவர் முத்துசாமி தலைமை தாங்கினார். தாளாளர் கே.பழனிச்சாமி முன்னிலைவகித்தார். முதல்வர் என்.ராமன் வரவேற்று பேசினார். மும்பை தைரோகேர் நிறுவனத்தின் இயக்குனர் ஏ.வேலுமணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, தன்னம்பிக்கையை விதைக்கும் வகையில் மாணவர்களிடையே பேசினார். இதில் அறக்கட்டளை உறுப்பினர் இளங்கோ மற்றும் பேராசிரிய -பேராசிரியைகள், மாணவ -மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

# Workshop

## Workshop on Python Programming

**ERODE MARCH 3:** The Department of Computer Science of Kongu Arts and Science College, Erode, funded by the Department of Bio Technology under DBT Star College Scheme, organized a 2 day Hands-on Training cum workshop on 'Python Programming' for first year Computer Science (UG) students at the Computer Center of the college.



Chief Guests D. Ravikumar, K Jeeva Software Development Engineers, Ascentz Technologies, Coimbatore, Correspondent K Palanisamy, principal Dr N Raman and HoD Ramesh spoke

---

அரசு பள்ளி மாணவர்கள் ஐந்து பேர் கலந்து கொண்டதில் மூன்று வெள்ளி இரண்டு வெண்கலம் வென்றனர். அபுல் ,அப்சல் ,எஸ்வந்த் அருள்செல்வி ,தரணிஷ் இவர்கள் தங்கப் கம் பெற்றனர் .மார்ச் மாதம் நேபாளி நடைபெறும் சர்வ போட்டியில் கலந்து கொள்வதற்கு இவர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.வெற்றி பெற்றவர்களுக்கு கிராண்ட் மாஸ்டர் மிர் நசிர் பரிசுகளை வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்

## ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் பயிலரங்கம்



**ஈரோடு ஜன.08-**

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மத்திய அரசின் உயிரிதொழில்நுட்பத் துறையின் கீழ் நட்சத்திர அந்தஸ்து பெற்ற இளங்கலை கணினி அறிவியல் துறையின் சார்பில் சுய மேலாண்மை குறுக்கு கலாச்சார தொடர்பு மற்றும் பெருநிறுவன கலாச்சாரம் பற்றிய முன்னாள் மாணவர் தொடர்பு திட்டம் பற்றிய ஒரு நாள் பயிலரங்கம் நேற்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக உடுப்பி, கர்நாடகா ரோபோசாஃப்ட் தொழில்நுட்பம், , வணிக ஆய்வாளர், எஸ் சுகனேஷ் கலந்து கொண்டு குறுக்கு கலாச்சாரம் பற்றி அறிந்து கொள்ள மாணவர்களைமேம்படுத்துதல் மற்றும் வெவ்வேறு வணிகங்களை எவ்வாறு கையாள்வது பற்றியும், வேறுபாடுகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் தகவல் தொடர்பு உத்திகளை. எவ்வாறு செயல்படுத்த வேண்டும். என்பது பற்றியும், இந்நிரலினை கற்றுக்கொண்டால் வேலை வாய்ப்புகள் எவ்வாறு பெறலாம் என்பதைக் குறித்தும் மிகச் சிறப்பாக விளக்கினர். இக்கருத்தரங்கம் தாளாளர் பி டி தங்கவேல் தலைமையிலும், முதல்வர் முனைவர் என்.ராமன் முன்னிலையிலும், கணினித்துறை தலைவர்பி.ரமேஷ், உதவி பேராசிரியர் மேற்பார்வையிலும் நடைபெற்றது. இதில் இளங்கலை கணினி அறிவியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவ மாணவியர்கள் சுமார் *120* கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இளங்கலை கணினி அறிவியல் துறை உதவி பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

தினபூமி,
ஜனவரி 08, 2023 thinaboomi.com